Regd. No. M விலை அணா 1

முரசொலி

தமிழ் வாரவெளியீடு..... ஆசிரியர் மு. கருணாநிதி

தோளுக்கிட்ட மாலையை பெரியாரின் தாளுக்கிட்ட பன்னீர்செல்வம்

முரசு 1] திருவாரூர். பெரியார் ஆண்டு 69, தை 29. (11-2-48) புதன்கிழமை [ஒலி 5

எழுதவில்லை

நான் ஜனநாயகத்தில் ஈரோட்டுப் பாதையைப்பற்றி விபரீத விளக்கம் தந்ததும் போதும்... இந்த திராவிடர் கழகத்துப் பேனா முனைகளிடம் சிக்கி வேதனைபபடுவதும் போதும். நான் மனதில் என்ன நினைத்துக் கொண்டு சொன்னேன்—எழுதினேன் என்பதே இவர்களுக்குப் புரியமாட்டேன் என்கிறது. நாடகத்தில் தாசிவேடம் போட்டுக் கொள்பவள் வாழ்க்கையிலும் தாசியாகவா இருப்பாள்?... அல்லது கண்ணகியாக நடிப்பவள் கற்புக்கரசியாகத்தானிருக்கிருளா? அதைப் போலத்தான் என் கதையும்! பத்திரிகை—மேடை இவைகளில் நான் திராவிடர் இயக்கத்தைக் கண்டித்தால்தான் என் அரசியல் பிழைப்பு நடைபெறும் என்பதற்காக அந்த "அரிதாரம்" பூசிக் கொள்கிறேன். அந்த பாஷை பேசுகிறேன். இன்னும் விலக்குகிறேன் என் முக்காட்டை! இதோ பாருங்கள்.

(பேனா முள்)

"சுயமரியாதை இயக்கம் தனி சமூக சீர்திருத்த இயக்கம் அல்ல என்பதும் ஜஸ்டிஸ் கட்சிக்கு மக்களிடையில் செல்வாக்கு பெற சந்தர்ப்பம் அளிக்கும் இயக்கம் என்பதும் தெளிவாகும்"

ஈரோட்டுப் பாதையில் என் கட்டுரை போகும் போக்கு இப்படி! இதற்கடுத்த வரியில் நான் தருகிற ஆதாரமே என் குற்றச்சாட்டுக்கு தக்க பதிலாக அமைகிறது.

"1929 செங்கற்பட்டு முதல் மாகாணச் சுயமரியாதை மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள், பல ஜஸ்டிஸ் கட்சி வைதீகர்க்குப் பிடிக்கவில்லை. அதனால் அவர்கள் சமுதாய சீர்திருத்தத்தில் மேம் போக்காகவே நடந்து கொண்டனர்" இந்த மேற்கோளும் என் ஈரோட்டுப் பாதையில் தான்! இம் மாநாட்டுக்குப் பின் ஈ. வெ. ராவுக்குப் பல எதிர்ப்புகள் தோன்றின என்பதை நான் என் கட்டுரையில் குறிப்பிடவில்லை. காரணம்.......காரணமா கேட்கிறீர்கள்? உண்மையை மறைப்பதுதானே என் கொள்கை.

சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்கள் ஜஸ்டிஸ் கட்சி வைதீகர்க்குப் பிடிக்கவில்லை என்று நான் எழுதியதிலிருந்து சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கட்சிக்கு செல்வாக்கு தேடுகிற இயக்கம் என்று நான் முன்பு குறிப்பிட்டது பொருந்தாது என்று ஆகிவிடுகிறதல்லவா?

ஜஸ்டிஸ் கட்சிக்கு செல்வாக்குதேடும் இயக்கமாக சுயமரியாதை இயக்கம் இருந்திருந்தால் மக்களிடை ஊறிப்போன மதம், கடவுள், புரோகிதம் ஆகியவற்றின் தலையில் அது கை வைத்து ஜஸ்டிஸ் கட்சி வைதீகர்களின் எதிர்ப்பை தேடிக் கொள்ளுமா? என்று என்னைக் கேட்டு என் முகத்தில் கரி தடவாதீர்கள்

சுயமரியாதை இயக்கம்...ஜஸ்டிஸ் கட்சி என்ற அட்டிகையில் பதித்திருந்த பணம், பதவி,

படாடோபம் முதலிய டஷ்பராககற்களை எடுத்தெறிந்து விட்டு ....அதை இன உணர்ச்சித் தணலில் போட்டு உருக்கி...... தன்னோடு சேர்த்து திராவிடர் கழகமாக.......தங்கத்தோடு தங்கமாக ஆக்கிக் கொண்டது. இந்த உண்மை என் உள்ளத்தில் இருக்கிறது; எழுத்தில் இல்லை. காரணம்......உங்களுக்குத்தான் தெரியுமே!

“அரசாங்க அடக்குமுறையைக் கண்டித்து காங்கிரஸ் போராட்டத்திற்கு அனுதாபங் காட்ட தீவிர இளைஞர்கள் முன் வந்த பொழுதுதான், சுயமரியாதை இயக்கம் அரசியலில் கலக்கக்கூடாது தனித்த சமூக இயக்கமாகவே நடைபெறவேண்டும் என்று ஈ. வெ. ரா. கூறினார் என்பதை நன்றாக சிந்திக்க வேண்டும்”

ஜனநாயகத்தில் என் உபதேசமிது! இதில் மறைந்து கிடக்கும் உண்மை என்ன தெரியுமா?

என்னைப்போன்ற சில துரோக மனப்பான்மை யுடையவர்கள் சுயமரியாதை இயக்கத்தில் பிளவு ஏற்படுத்த வேண்டி அரசியலில் கலக்க வேண்டுமென்று துடித்தனர். ஈ. வெ. ரா. அந்த சூழ்ச்சியை சுக்கு நூறாக்குவதற்காக சுயமரியாதை இயக்கம் -அரசியலில் கலக்கக் கூடாது என்று ஓரேயடியாக அடித்தார். அந்த அடி......சதிக் கும்பலின் மண்டையில் சம்மட்டியடியாக விழுந்தது.

அரசியலில் பங்கெடுத்துக் கொள்வது ஈ. வெ. ரா. வுக்குப் பிடிக்கவில்லை யென்றால் 1932க்குப் பிறகு சுயமரியாதை இயக்கத்தை அரசியல் கொள்கை யுடைய இயக்கமாக மாற்ற எண்ணுவாரா?

“இதுவரை அரசியல் கூடாது என்ற சு. ம. இயக்கம் இப்பொழுது அரசியல் வேண்டுமென்று முடிவு கட்டியது குறிப்பிடத்தக்கது”

என் கிண்டல் இது! அந்தக் கிண்டலை யொட்டி இருக்கிற “இதுகால வேகத்தின் அறிகுறி” என்ற என் வாசகமே எனக்கு ஆப்பாக அமைகிறது. அது மாத்திரமல்ல...‘அவர் மாஸ்கோ சென்று அந்த நிலைமையைக் கண்டபிறகு சு. ம. இயக்கத்தை அரசியல் கொள்கையுடைய இயக்கமாக்க எண்ணினார்” என்று நானே என் கட்டுரையில் ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். என்னை யறியாமலேயே குதித்துவிட்ட உண்மைகள் இவை. புதிய ‘ஸ்திரீ பார்ட்’காரன் சமயத்தில் ஆண் நடை நடந்து விடுவானல்லவா அதைப்போல!

“விருதுநகர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இந்தி எதிர்ப்பு கதர் எதிர்ப்புத் தீர்மானங்கள் பகுத்தறிவு இயக்கத்தின் பலன்கள் என்றாலும் காங்கிரஸ் எதிர்ப்பு நோக்கங்கொண்ட அரசியல் தீர்மானங்களே”

ஈரோட்டுப் பாதையில் நான்!

விருதுநகர் மாநாடு இந்தியை எதிர்த்தது, தமிழ்-வாழ! கதரை எதிர்த்தது காட்டுமிராண்டிக் காலத்தை-மாற்ற! இது காங்கிரசை—எதிர்ப்பதற்காக என்றுரைப்பது என் கைச்சரக்கு!....

“இங்கிலாந்தில் மேக்ஸ்பரோ லேக்பார்க்கில் தொழிலாளரைப் பற்றிப் பேசும்போது ஈ. வெ. ரா. (கம்யூனிஸ்ட் சக்லத்வாலாவோடு சேர்ந்தபோது) பார்ப்பன ஆதிக்கத்தையும் பனியா சுரண்டலையும் மறந்துவிட்டார்”

ஜனநாயகத்தில் இதைக் கொட்டை எழுத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். கம்யூனிஸ்ட்டுகளுடன் சேர்ந்தாலே பார்ப்பனீய பனியா எதிர்ப்பு உணர்ச்சி மறைந்து விடும்போலிருக்கிறது என்று என்னை நீங்கள் கேட்பதற்கு முன் ஒரு வார்த்தை; ஈ. வெ. ரா. இங்கிலாந்தில் பார்ப்பனீய, பனியா ஆதிக்கத்தைப் பற்றிப் பேசவேண்டிய தேவையில்லாததால் விட்டிருப்பார் அல்லது நான் குறிப்பிட்டிருப்பது போலவே மறந்திருப்பார் என்று வைத்துக் கொள்வோம். எழடுக்குக் கோபுரம்—ஏராளமான சொத்து—இருப்பதற்கு இரத்தின சிம்மாசனம்—அங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான் இவைகளையெல்லாம் நாள்தோறும் காணுகிறோம் நாங்கள். ஏழைகள் தங்குவதற்கு வீடில்லை என்று தவிக்கத் தவிக்க...தில்லைவாழ் நடராசன் தங்க ஓடு போட்ட மாளிகையில் திருநடனம் புரிகிற காட்சியைக் காணுகிறோம். வெம்மையை வாரி இறைக்கும் வெயிலைத் தாங்க... ஒரு முக்காடு போட்டுக்கொள்ள முழத்துணி கிடைக்காத முனியனையும் முத்துவடம்-பவளவடம் போட்டுக் கொண்டு தலையில் வைரமுடி தரித்து நிற்கும் திருப்பதி வெங்கடேசனையும் காணுகிறோம் நாட்டில்!

வாய் திறந்திருப்போமா?... வயிற்றெரிச்சல் பட்டிருப்போமா? அந்தக் கல் முதலாளிகளைப் பற்றிப் பேசுவதென்றால் எங்கள் கம்யூனிஸ்ட் வர்க்கத்திற்கே

கலக்கந்தான்! இந்த லட்சணத்தில்.........நாடு நகரம் பட்டி தொட்டிகள் எல்லாம் சுற்றி—தன் நாட்டு மக்களிடம் பார்ப்பனீய—பனியா ஆதிபத்யங்களை அழிக்க இன முழக்கம் செய்து வரும் ஈ. வெ. ரா. இங்கிலாந்தில் மறந்துவிட்ட ஒன்றை நான் பெரிதுபடுத்தி எழுதுவது பெருந் தவறுதான்! இருந்தாலும் எழுதவேண்டியிருக்கிறது. எங்கள் நாடகத்தில் எனக்கு இந்த வில்லன் பாத்திரம்! நடித்துத்தானே ஆகவேண்டும்.

"காலையில் காங்கிரசில் சேர இணங்கினார். மாலையில் நடந்த கூட்டத்தில் "சில வாலிபர்கள் காங்கிரஸ் மேனியா பிடித்து நிற்கிறார்கள்" என்றும், "அதற்கு சுயமரியாதை இயக்கம் ஒருநாளும் இடங்கொடாது" என்றும் பேசினார். க்ஷணச்சித்தம் க்ஷணப்பித்தம் 'பெரியார்'களிடமும் உண்டு"

இது என் நெஞ்சறிந்தபொய்! ......நீங்களே யோசித்துப்பாருங்கள் .....காலையில் காங்கிரசில் சேர இணங்கியவர் மாலையில் மறுத்துப் பேசுவாரா?...... அதுவும் இது என்ன சாதாரண அமாவாசை சந்தா சேரும் விஷயமா? பெரிய அரசியல் விஷயத்திலா .....ஒரு பொறுப்புள்ள தலைவர் இப்படி நடந்து கொள்வார்? ஆகவே க்ஷணச்சித்தம்-க்ஷணப்பித்தம் என்ற என் கையாண்டியை கம்யூனிஸ்ட் நண்பர்களுக்குத் தெரியாமல் 'வாபஸ்' வாங்கிக் கொள்கிறேன். ஈ. வெ. ராவின் பேச்சை நான் எடுத்துக்காட்டியிருப்பதிலிருந்து என்போன்ற சில வாலிபர்கள் காங்கிரஸ் மேனியா பிடித்து நின்ற கதை அம்பலத்திற்கு வருவதோடு .....கட்சிக்குள்ளேயே என்போன்ற களையான்கள் வாழ்ந்தன என்பதும் தெளிவாகும்.

தேர்தலில் ஆர். கே. சண்முகத்தையும், டாக்டர் நாயுடுவையும் ஆதரித்தார் என்று குற்றச்சாட்டு குறித்திருக்கிறேன். தென்னாட்டைப் பற்றிக் கவலைப் பட்டறியா காங்கிரசுக்கு எதிர்ப்பு முன்னணி அமைக்கும் விதத்தில்......தன் இனத்தவர்களாகிய இரு தோழர்களை ஈ. வெ. ரா. ஆதரித்துப் பேசியதும் எழுதியதும் இயற்கை; இருக்கவேண்டிய கொள்கை. நாங்கள் கூடசென்ற தேர்தலில் காங்கிரசை சென்னையில் எதிர்த்தோம் தஞ்சையில் ஆதரித்தோம். ஒரே தேர்தல்—ஒரே விஷயம்—ஒரே சமயம்-ஒருபுறத்தில் காங்கிரசை எதிர்த்துப் போட்டி! மற்றொரு புறத்தில் "வோட் பார் காங்கிரஸ்" முழக்கம் "இந்த வெட்கக்கேட்டை வெளியில் சொல்வதில்லை......ஈ. வெ. ராவின் தேர்தல் கொள்கையைப் பழிக்கப் புறப்பட்டு விட்டாயே!" என்று என்னைப் பார்த்து கேலி செய்வீர்கள்.

"ஜஸ்டிஸ் கட்சியின் மூலமே சமூக சீர்திருத்தம் செய்யமுடியும். அதை சமதர்மக் கட்சியாகவும் ஆக்கிவிட முடியும் என்று ஈ. வெ. ரா. அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார்." (தமிழர் தலைவர் 149 பக்கம்) காங்கிரசை ஏகாதிபத்ய எதிர்ப்பு ஸ்தாபனமாகவும் ஜஸ்டிஸ் கட்சியை ஏகாதிபத்ய அடிமைக் கும்பலாகவும் கருதிய கம்யூனிஸ்ட் பாதையில் மேற்படி கருத்துக்கள் உண்மைகளாகப் பட முடியாது"

ஈரோட்டுப் பாதையில் என் எழுத்தின் வேகம் இந்த ரீதியில் உச்சமடைகிறது. எங்கள் கம்யூனிஸ்ட் பாதையில் எதுதான் உண்மையாகப் பட்டது; இதுபட! "ஜஸ்டிஸ்கட்சியை சமதர்மக்கட்சியாகவும் ஆக்கிவிட முடியும் என்று ஈ. வெ. ரா. நம்பிக் கொண்டிருந்தது கம்யூனிஸ்ட் பாதையில் உண்மையாகப் படமுடியாது என்கிறாயே.... இது.........தில்லுமல்லு தானேயப்பா!......ஈ. வெ. ரா. நினைத்தபடி ஜஸ்டிஸ் கட்சியின் பிற்போக்கு சக்திகளை சேலத்தில் ஒடித்தெறிந்து சமதர்ம கீதங் கிளம்பும், திராவிடர் கழகமாக மாற்றியமைத்து, தன் நம்பிக்கைப் பாதையில் வெற்றியடைந்திருக்கிறாரே' என்று நீங்கள் என்னைப் பார்த்துக் கேட்பீர்கள்......கேளுங்கள். உண்மைதானே! ஒப்புக்கொள்கிறேன். நான் ஒப்புக்கொள்வதை மட்டும் வேறு யாரிடமும் சொல்லி விடாதீர்கள். இப்பொழுது எனக்கிருக்கிற இந்த பத்திரிகைக்கும் ஆபத்து வந்துவிடும்.

நான் நாஸ்திகன் ஏன்? என்ற நூல் வெளியிட்டதற்காக ஈ.வெ. கிருஷ்ணசாமியும், நானும் கைது செய்யப்பட்டோம்.

சர்க்கார், கட்சியை அழித்துவிடும் என்ற செய்தி ஈ. வெ. ராவுக்குத் தெரிந்ததால் வீணாக இயக்கம் அழிந்து விடுவது சரியல்ல என்பதற்காக எங்களை மன்னிப்பு கொடுக்கும்படி ஈ. வெ. ரா. கூறினார்.

"ஈ. வெ. கி. வேண்டுமானால் மன்னிப்புக் கொடுக்கட்டும். தன்னால் முடியாதென்று ஒரே பிடிவாதமாகச் சொன்னார் ஜீவா."

இப்படி ஈரோட்டுப் பாதையில் நான் எழுதி இதோடு விட்டுவிட்டேன். என் வீர தீர பாக்ரமத்தை நீங்கள் மெச்சு

(5-ம் பக்கம் பார்க்க)

காந்தியாரையே கொன்றது பார்ப்பனீயம்!

முரசொலி

திருவாரூர்.

பெரியார் ஆண்டு 69. தை 29

புதன் 11—2—48.

பழிக்குப்பழி.

"நம் நாடு வளமையாக இருக்க வேண்டுமானால் நாட்டிலுள்ள வகுப்புவாத துரோதங்களை அடியோடு ஒழிக்கவேண்டும். மகாத்மாவினது வாழ்நாளில் முழுவெற்றி அடைய முடியாத வகுப்புவாத ஒழிப்பை அவரது மரணத்தின் விளைவாகவேனும் பெறவேண்டும் ...."

இது திராவிடர் கழகத்து தீர்மானமல்ல! காங்கிரஸ் காரியக் கமிட்டி முடிவின் சாரம்.

நாம் வரவேற்கிறோம். 'சொன்னோம் சொல்கிறார்கள்' என்று பெருமைப் படுகிறோம். நமது பாசறை கீதத்தின் எதிரொலி இது என மகிழ்கிறோம். மதமெனும் பேய் பிடியாதிருக்க வேண்டுமென நாம் கூறிய காலத்தில் நமக்கு கிடைத்தது நாத்திகர் பட்டம். இன்று அவர்கள் கருத்தில் இது கலக்க காந்தியாரைப் பலிகொடுக்க வேண்டியதாயிற்று.

இந்தத் தெளிவும் முடிவும் முன்னமே செயலாக மாறியிருந்தால் ஒரு உத்தமரின் கோரக் கொலை நடந்திருக்காது.

நடந்ததை மறப்போம். நாட்டு நலத்தில் விழி வைத்து ......இனியாவது நல்வழி நடப்போம்......என்ற உறுதி மொழிதான் இனி திராவிடர்க்குத் தேவை!

'வகுப்புவாதம்' வீழ்க என்கிறது காரியக்கமிட்டி. 'சாப'த்திற்காளான அந்த வகுப்புவாதம் எது?.....அந்த வகுப்புவாதத்தின் 'உயிர்நிலை' எங்கே இருக்கிறது? ....என்ற ஆராய்ச்சி அவசியம் தேவை.

'அல்லித்தண்டில் நுழைந்து பாதாளலோகம் சென்றால்...... அங்கிருக்கும் பாறைகளின் இடுக்கில் பறந்துகொண்டிருக்கும் பெரிய வண்டில் இருக்கிறது மயில்ராவணன் உயிர்' என்பார்கள் புராணீக போதகர்கள். அதைப் போலவேதான் வகுப்புவாதத்தின் உயிர் நிலையும் அமைக்கப் பட்டிருக்கிறது பத்திரப்படுத்தப் பட்டிருக்கிறது. வகுப்புவாதம் வீழவேண்டுமானால் மேற்போக்கான திருத்தங்கள் பயன்படா! அதன் ஆணிவேர் அறபடவேண்டும். வகுப்புக்களை அனுமதித்துக்கொண்டு வகுப்புவாதத்தை அழிக்க நினைப்பது ஆகாத செயல்! நெருப்பையும் மூட்டி விட்டு அதை அணைக்கவும் நீர் தேடுவதுபோல!

வகுப்பு ஒழிந்தால் வாதம் ஒழியும—வகுப்பு வளர்ந்தால் வகுப்புவாதம் வளரும். பார்ப்பனீயம் ஆகாது-கூடாது-என்று நாம் பேசுவது வகுப்புவாதம் என எதிரிகளா பிரச்சாரம் செய்யப்படுகிறது. வகுப்புக் கலவரத்தைக் கிளப்பிவிடும் சாதனத்திற்குப் பெயர் வகுப்புவாதமா? அல்லது வகுப்பு பேதத்தைத் தகர்த்தெரியும் திராவிடர் கழக கொள்கைகளுக்குப் பெயர் வகுப்புவாதமா? கலகமும், போராட்டமும் ஏற்படுவதற்கு காரணம தன்னுடைய மனிதாபிமானமற்ற கொள்கைகளை விடாப்பிடியாக பிடித்துக் கொண்டு இந்த நாட்டில் அக்கிரகாரங்களில்—ஆலயங்களில்—சிற்றுண்டிச் சாலைகளில்—அரசியல் துறைகளில் தங்கள் சாதி உயர்வைக் காட்டிக்கொண்டிருக்கும் பார்ப்பனியமும்—பிராமண சேவா சங்கங்களும் வகுப்புவாத ஸ்தாபனங்களாக்கப்பட்டு ஒழிக்கப்படவேண்டும்.

வகுப்புக்கள்—சாதி முறைகள்—பிறவியின் காரணமாக உயர்வுதாழ்வுகள் அழிக்கப்பட்டால் பறையன் — பள்ளன் — பார்ப்பனன் என்றபேதங்கள் மறையும். சாதிக்கொரு சங்கம்—சங்கங்களுக்குள் போட்டி...... என்ற நிலை மாறும். சமத்துவம் பூக்கும். சமதர்மம் ஓங்கும். காந்தியாருக்காக கட்டப்படும் உண்மையான நினைவுச் சின்னங்கூட இதுதான்! வகுப்புவாதம் வீழ்வதற்கு சரியான வழி...... வகுப்பு வாதத்தின் உயிர் நிலையில் வாள் வீசுவதுதான்! நமது ஆட்சியாளர் இதைச் செய்ய வேண்டும்.

'மதத்தை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனங்கள் அரசியல் லட்சியங்களுடன் வேலை செய்வதற்கு இடந்தரக் கூடாது'

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் இந்த தீர்மானமும் மிகவும் பாராட்டத்தக்கது. மதத்தை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனங்கள் அரசியல் லட்சியங்களோடு வேலை செய்வதற்கு மட்டுமில்லை—மதத்தை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனங்கள் இருப்பது கூட ஆபத்து—அபாய அறிகுறி—அடுத்து ஒரு கோட்சே தோன்ற காரணமாகிவிடும் என்பது நம் கருத்து.

மத ஸ்தாபனங்கள் அரசியல் லட்சியங்களோடு வேலை செய்வதால் மட்டுமே......இம் மாதிரி கோரங்கள் விளைவதாகக் கூற முடியாது.

“பறையனுக்கு என்னடா பக்தி?’ என்ற பதட்டம் நந்தனை நெருப்பில் தள்ளி ‘ஜோதியில் கலந்தான்’ எனக் கூறிற்று. மதத்திரையில் அந்த மாபெரும் சதி மறைந்தது.

மதமெனும் பேய் மாய்க எனக் கூறிய இராமலிங்கர் மதவெறியர்களால் கொலை செய்யப்பட்டார். ‘அருட் சோதியிலே ஐக்யமானார்’ என்ற அண்டப்புளுகு உருவாயிற்று. மதபக்தி மக்கள் கண்களை—கருத்தை மறைத்தது. எண்ணாயிரம் சமணர்களை கழுவேற்றி... .....கழுமரங்களுக்கு ‘ரத்த அபிஷேகம்’ செய்து வைத்தா திருஞானசம்பந்தர் ஏனென்று கேட்கவில்லை மக்கள். மத விசுவாசம் அவர்களை மௌனிகளாக்கிற்று.

இப்பொழுதுதான் என்ன; காந்தியார், புது டில்லியில் பொது மக்கள் முன்னிலையில் சுடப்படாமல்—வார்தா ஆஸ்ரமத்தில் கொல்லப் பட்டிருந்தால் அவரை அந்தக் கொலைகாரர்களே ரகசியமாக எடுத்துப் புதைத்துவிட்டு “காந்திஜீ திடீரென்று புஷ்ப விமானத்தில் ஏறி சொர்க்கலோகம் போயிருக்கிறார்” என்று புராணம் பாடியிருப்பார்கள். மதவெறி செய்த சதி மறைக்கப் பட்டிருக்கும்.

நந்தனை நாசமாக்கி—வள்ளலார் வாழ்வை வெட்டி—சமணரை சாய்த்து இதுவரை இன்பவாழ்வு நடத்தியது போலவே இனியும் இந்த சதிகார மதம் வாழ, வழிகோலப் பட்டிருக்கும். ஆனால் காந்தியாரின் படுகொலை, இந்து மதத்தின் இரத்தந்தோய்ந்த நாக்கை, நமக்கெல்லாம்—இல்லை—நம் பேச்சைக் கேளாமல் இருப்பவர்க்கெல்லாம், படம் பிடித்து காட்டிவிட்டது. அதற்காகத் தான் சொல்லுகிறோம் மதவெறியின் கடைசி இரையாக மாவீரர் காந்தி இருக்கட்டும் என்று! காந்தியாரின் சோகமுடிவு பாம்புக்குப் பால் வார்த்த கதை!

எந்த வர்ணாஸ்ரமத்தைக் காக்க வழி வகுத்தாரோ அந்த வர்ணாஸ்ரமம் அவர் வாழ்வு குடிக்கும் பாம்பாயிற்று! எந்த இந்துமத சீர்திருத்தம் தேவை எனப் பணி புரிந்தாரோ ... அதே இந்துமதம் அவருக்கு இறுதிப் பரிசாக மூன்று குண்டுகளை அளித்தது. காந்தியார் அகிம்சைக்காகப் பாடுபட்டார்...... அதில் அவர் வெற்றியடையவில்லை என்பதற்கு கோட்சேயின் கோரச் சிரிப்பு சான்று!

காந்தியார், உண்மை—சத்திய நெறி இவைகளை போதித்தார். அதில் அவர் தோல்வியுற்றார் என்பதற்கு செய்திகளைத் திரித்துப்போட்டு அராஜகத்தைக் கிளப்பிவிடும் இந்து—மித்திரன் ஏடுகள் சான்று! காந்தியார், இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார்—அதிலும் அவருக்கு வெற்றியில்லை என்பதற்கு போர்க்கோலம் பூண்டு நின்ற படேல் துரை சான்று! காந்தியார் அமைதிக்கு வழிகோலினார்......அதிலும் அவர் ஆறுதல் பெறவில்லை என்பதற்கு நேற்று ஈரோட்டில் நடந்த பெருத்த கலகம் சான்று!

காந்தியாரின் வெற்றிப் பாதைகளிலே முட்டுக் கட்டையாக நின்றது எது?...எது? எது?... மதம்! மதவெறி! இந்த வெறி ஒரு விடுதலை வீரரை வீழ்த்தியது......இந்த மதத்தை பழிக்குப்பழி வாங்கவேண்டாமா?... எஞ்சியுள்ள தலைவர்களையாவது காப்பாற்ற வேண்டாமா? திராவிடரே! சொல்லுங்கள்!

பெரியார் ஆலோசனை

காந்தியாருக்கு நினைவுச் சின்னமாக, இந்தியாவை காந்தி தேசமென்றும், இந்து மதத்தை காந்தி மதமென்றும் பெயர் மாற்றலாமென பெரியார் ஈ. வெ. ரா.-பண்டித நேரு முதலிய தலைவர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

(3-ம் பக்க தொடர்ச்சி)

கிறீர்களா?......அவசரப் படாதீர்கள். சிறைக்குப் பயந்து ‘அன்டர் கிரௌண்ட்’ அமைக்கிற நானா மன்னிப்புக் கேட்காமல் இருப்பேன். ஈ. வெ. ரா. கட்சி நலத்திற்காக சொன்னார். கட்சி நலத்திற்காக நாங்கள் சிறை செல்லாமல் மறைந்துவாழ்வதாகக் கூறுகிறோமே... இதைவிட அவர் அன்று கூறியதில் அதிக உண்மையும் அர்த்தமுமிருக்கிறது. இந்த செய்தியை ஈ. வெ. ராவின் கோழைத்தனம் என்று குறிப்பிடுகிற நான்...... மன்னிப்புக்கேட்டு வெளியே வந்த செய்தியை மறைப்பது.... மட்டாக வேலை என்று சொல்லி சிரிப்பீர்கள், சிரியுங்கள். கைதட்டிச் சிரியுங்கள். நானும் என் தோழர் ஒருவரும் கத்திசண்டை போட்டுக்கொண்ட கதையைக் கேட்டு......அப்பொழுது சிரித்ததை விட அதிகமாகவா சிரிக்கப் போகிறீர்கள்- நன்றாகச் சிரியுங்கள். எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்னுகிறது; கடிதத்தைத் தொடர கை ஓடவில்லை.

இப்படிக்கு

தோழன், ப. ஜீவானந்தம்.

அதோ பெரியார்!

கரந்தை என், எஸ். சண்முகவடிவேல்

காந்தியார் மறைந்தார். அவர் பொன்மேனி சாம்பற் பொடிகளாக்கப்பட்டு..... தண்ணீரோடு கலந்து கரையப்போகிறது. காந்தியாரின் எலும்புப் பொடிகளை கடல்களும் நதிகளும் அணைத்துக்கொள்ளப் போகின்றன. அந்த அலைகள் இந்த வெட்கங் கெட்ட நாட்டைப் பார்த்து சிரிக்கப்போகின்றன. காரி உமிழப்போகின்றன. குமுறப்போகின்றன. "ஏ! இந்திய உபகண்டமே! உன்னிடம் உத்தமர்கள் இருக்க தகுதியில்லையா? புத்தன் காலம் முதல் நேற்று காந்தியார் காலம் வரை நீ திருந்தவில்லையென்றால்...நீ இருந்தால் என்ன...பூகம்பத்தால் தகர்ந்தொழிந்தால் என்ன...?'' என்று அலறப்போகின்றன.

காந்தியாரைக் கொன்றவன்......அந்த துரோகியின் பெயர் வரலாற்றையே களங்கப்படுத்த வந்து நிற்கிறது......... கோட்சே என்ற மராத்திய பார்ப்பனன்! இல்லை; ..இந்தியாவில் கொழுப்பேறி வாழும் பார்ப்பனீயம்! ஆமாம் சதிகாரக் கும்பல். காந்தியார் பார்ப்பனராய்ப் பிறக்காத காரணத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டார். வெங்கண்ணு காலம் முதல் இன்றுவரை அரசியல் பீடத்தை ஆட்டிக்கொண்டு தான் வருகிறது ஆரியம். ஆரிய ஆதிக்கமே! உனக்கு முடிவு கிடையாதா?... காந்தியார் உயிரைக்குடித்த பிறகாவது உன் உதிரவாயை மூடக்கூடாதா?...... இல்லை......உன் கோர வாய் கிழிக்கப்படத்தான் வேண்டுமா? உன் ஆணவம் அழிந்த நாள்தானே உண்மையான விடுதலை நாள்!........

கோட்சே காந்தியாரை ஏன் கொன்றான்? நமக்குள்ள அன்பு ...பரிதாபம்...காந்தியார் மேல் அவனுக்கில்லையா?

''காந்தியார் எங்களை நேசித்தார்—அதற்காக கண்ணீர் வடிக்கிறேன். உலக உத்தமனாக விளங்கினார்—அதற்காக மகிழ்கிறேன். அகிம்சா மூர்த்தியாக விளங்கினார்—அதற்காகப் போற்றுகிறேன். ஆனால் அவர் கோயிலில் 'அரிஜனங்களை' நுழைய விட்டார்—அதற்ராக அவரைக் கொன்றேன். என் மதத்தின் மதிப்பு குறைகிறது என்பதற்காக! அவர் அஞ்சாமைக்கு என் பாராட்டுதல்-சாந்தத்திற்கு என் களிப்பு. ஆனால் 'ராம் ரஹீம்' ஒன்று என்றதற்காக என் குண்டுவீச்சு'' என்று கூறி கோட்சே நகைக்கிறான்.

தன் இனம் வளரும் வரை பிறரைப் புகழ்ந்து, பஜித்து, மத்தளம் தட்டிப் பஜனைசெய்யும்! தன் இனத்திற்கு ஒரு மூலையில் இடையூறு முளைத்தால் போதும—பஜிக்கப் பட்டவரையே 'ஜோதி'யில் கலந்தார் என்று கூறி சமாதி எழுப்பிவிடும்.. இதுதான் ஆரியம்.

கோட்சே—காந்தியாரிடம் காதல் உடையவன்தான்........ சீசரிடம் காதலுள்ள புருட்டஸ், சீசரின் உயிரை சிதைத்தது கடமைக்காக என்றான். அதேபோல் இந்தக் கோட்சே தன் இனத்திற்காக தான் செய்யவேண்டிய கடமையைச் செய்தான்.

நேற்று வரை சொன்னோம் ஆரியம் ஆலகாலம் என்று! யார் காதிலும் விழவில்லை. இன்று "மெய்தானப்பா நீ சொன்னது'' எனக் கண்ணீர்விட்டுக் கதறும் தேசீயத் தோழர்களைக் காண்கிறோம். நாமும் அழுதோம்.

அழுது கொண்டிருக்கவே நேரமில்லை, ஆரியம் அடுத்த காவுக்கு மோப்பம் பிடிப்பதற்குள் விழித்துக்கொள்ள வேண்டும். நம் கண்ணீரும் கம்பலையும் ஆரியச் சூதுகளை மறைத்துவிடும். தேசிய திராவிடரே! கண்ணீரைத் துடையுங்கள், விம்மலை விடுங்கள்.

காந்தியாரைக் கொன்ற மத வெறியை—பார்ப்பனீயத்தைத் தூள் தூளாக்கித்திருவோம் என முழக்கமிடும், பெரியார் ராமசாமி அதோ! ஈரோட்டு மாளிகையில் அல்ல! நாடு—நகரங்களில்! பட்டி தொட்டிகளில்! அவர் படையில் சேருங்கள்!... மீண்டும் வடநாட்டை—வஞ்சக ஆரியத்தை நம்பாதீர்கள். அங்கே காண்பது பாம்புக்கூட்டம்!............காந்திய தியாகம் வாழ்க என்ற ஒலியெழுப்பும் உள்ளத்தோடு பெரியார் பெரும் படைக்கு வாருங்கள்!

ஜனவரி மாத பாக்கியை இந்த வாரத்திற்குள் அனுப்பாத விற்பனையாளர்கட்கு பத்திரிகை அனுப்புவது கண்டிப்பாய் நிறுத்தப்படும்,

—நிர்வாகி

விதவைப்

பெண் தேவை.

ஆயிரம் ரூபாய்சொத்துடையவரும், மாதம் ரூ, 50 வருமான முடையவரும் 25 வயதுடைய மருத்துவ வகுப்பு தோழருக்கு விதவைப் பெண் தேவை

விபரத்திற்கு:—

ச. பரசுராமன்,

பார்பர் ஷாப்,

விஜயபுரம் P.O.

மதம் மக்களுக்கு அபின் போன்றது !

ஸ்ரீமான்

மகாலிங்க சாஸ்திரிகள்

—(தில்லை வில்லாளன்)—

ஆத்தூரில்—

“சாஸ்திரிகாள், வரவேணும்”

“மங்களமுண்டாகட்டும்!”

மகாலிங்க சாஸ்திரிகள் உள்ளே நுழைந்தார். தண்டபாணிச் செட்டியார் காங்கூப்பி சிரம் வணங்கி வரவேற்றார். சாஸ்திரிகள் ஆசீர்வதித்தார்!

“என்னசாமி, நம்ப பயலுக்கு இந்த வருடத்திலேயே ஒருகட்டு கட்டிப் போட்டு விடலாமின்னு இருக்கேன்”

“செட்டியார்வாள், சுபகாரியத்திற்கு நாள் கிழமை பார்ப்பாளோ, நாளைக்கே நடத்திடுவோம்”

“பயலைப் பாத்திருப்பீங்களே”

“பேஷாக, பயலுக்கு என்ன, அசல் மன்மத புருஷன்ன”

“ஆனால்...............”

“அதுக்கென்ன, இந்த மகாலிங்க சாஸ்திரிகள் இருக்கிறப்போ கவலை என்? அடுத்த முகூர்த்த நாளில் தாலியை கட்டுவன் உன் மகன், ஒரு எட்டாத ‘தங்கக்குட்டி’ கழுத்திலே!

“இப்பொழுது செலவிற்கு ஏதாவது வேணுமோ”

“செட்டியார்வாள், பணம் என்ன பிரமாதம், இன்னைக்கு வரும், நாளைக்குப்போகும் மனுஷாதான் வேணும்”!

செட்டியார் ஐந்து பத்து ரூபாய் நோட்டுகளை நீட்டினார். சாஸ்திரியின் ஒரு காம் ‘உபசார வழக்கமாக’ மறுத்தது. மற்றொரு காம் பணத்தை வாங்கி இடுப்பில் செருகிற்ற!

* * *

சாத்தூரில்:—

“என்ன பாக்கியம், உன் பொண்ணு வேற, என் மகள் வேறா? நல்ல இடம், பணதகில் புரளலாம்! உன் அந்தஸ்துக்கு ஏற்ற இடம்”

“சாமி சொல்ற பேச்சுக்கு தடையேது?”

“அப்படிச் சொல்லப்படாது. நேக்கு நன்னாப் புடிச்சிருக்கு பயல் பலே ஜாட்டிகை, காரியத்தில் வெகு கெட்டி—செட்டிப் பிள்ளை கெட்டின்னு இவனைப் பார்த்துத்தான் சொல்லியிருப்பாள் பெரியவா!”

“பையன் பெயர்—?”

“தாண்டவராயன்! ஆத்தூர் தண்டபாணிச் செட்டியாரின் ஒரே மகன். ஆஸ்தியில் குபேரன்”

“அப்படியா?”

“அவனைப்பத்தி இன்னைக்கெல்லாம் பேசிண்டே இருக்கலாம். இரத்தினச் சுருக்கமாச் சொல்றேன். ஒற்றைக் காலில் நின்று இந்த உலகத்தையே ஆட்டி வைப்பான்னு.”

“அது சரி, நம்ம பெண்ணைப் பார்த்திருக்கிறீர்களா?”

“திவ்யமாய்.........”

“அப்படியானால்.........”

“அதைப்பற்றி கவலை உமக்கு? அதுக்கு நானுச்சு, அந்த தண்டபாணிச் செட்டியாராச்சு!”

பாக்கியத்தம்மாள் பையிலிருந்து மகாலிங்க சாஸ்திரிகளின் மடிக்கு ஐம்பது வெள்ளிப் பணங்கள் பயணமாயின!

* * *

புத்தூரில்:—

“பெண் என்றால் தங்க விக்ரகம்—அவ்வளவுதான் சொல்வேன்”

“அவ்வளவு அழகோ?”

“என்ன அப்படி கேக்கிறேள், அந்த ஊர்வசி, மேனகை...எல்லாம் இவளண்டே நெருங்க முடியுமோ?”

“பெண்ணின் பெயர் என்னவோ?”

“கமலக்கண்ணி”

“பெண்ணில்லாதவீடு. பெரிய குடும்பம் குடும்பத்தைக் கட்டிக் காக்கவேண்டும்”

“உங்கள் ஒரு குடும்பத்தையென்ன, உங்க ஊரையே ஒற்றைக்கண் வீச்சால் ஆட்டிவைப்பாள், சுழட்டிடுவள்’!

செட்டியாரும், சாஸ்திரிகளும் பேசிக்கொண்டே ஜோசியர் சோணாசல அய்யர் வீட்டில் நுழைகிறார்கள்.

“ஜாதகம் பொருத்தம் பாருங்கோ” என்று சாஸ்திரி இரண்டு குறிப்பேடுகளை நீட்டினார். செட்டியார் அருகிலிருந்த பலகையில் அமர்ந்தார். அய்யரும் ஏட்டைப் பிரித்தார்.

“வெகு திருப்தி. இந்த ஜாதகன் இந்த பொண்ணுக்கின்னு பிறந்திருக்கான்”

"ஜோசியர் வாள்! கணக்கைச் சரியாய்ப்பார்த்துச் சொல்லுங்கோ, தோஷம், ஷேஷம், எதுவும் இருக்குதான்னும் பாத்து விடுங்க."

"என்ன செட்டியார் வாள்! இப்படிக் கேக்கிறேள், பஞ்சத்தில் பஞ்சாங்கம் பிடித்தவனல்ல. பரம்பரை ஜோதிஷம். தோஷமா நன்னாச் சொன்னேள் போங்கோ! இந்தப் பொண்ணு ஜாதகம் வெகு கிருப்தின்னு தங்க எட்டில் வைத்தால் பதிக்கணும் இந்த ஜாதகத்தை. நல்லதைப்பத்தி நாள் கணக்கிலா பேசுவா. நாலே வார்த்தைகளில் சொல்றேன். பொருத்தம்னா இதுபோல அமையாது போங்கோ. அடுத்த வைகாசி பதினைஞ்சாம் நாளுக்குள்ளே ஒரு சுபதினத்தில் இந்த மங்கள காரியம் முடியும் அப்போ சொல்வேள் இந்த சோணாசல அய்யரின் பாண்டித்யத்தை"

"கலியாணம் என்றால் ஆயிரங்காலத்துப் பயிர் பாருங்க"

"அது நேக்குத் தெரியாதோ! திவ்யமாய் இந்த சுபகாரியத்தை முடியுங்கோ. அடுத்த வைகாசியில் எட்டுஜதை கொட்டுமேளத்தோடு ஜாம் ஜாமென்று முகூர்த்தத்தை முடியுங்கோ"

"சரி நாளும் பார்த்துவிடுங்க"

செட்டியார் கூறிய வார்த்தைகளைக் கேட்ட அய்யர் மீண்டும் எட்டைப் பார்க்கத் தொடங்கினார். சாஸ்திரிகள் குறுக்கிட்டார்.

"நாள் தள்ளிப்போக வேண்டாம். அடுத்த வாரத்திலே வேண்டாம். என் வீட்டில் சீமந்தம். அதற்கு அடுத்த வாரம் புரோகிதர் வீட்டில பிராமணார்த்தம்"

"பெயர்ப் பொருத்தத்திற்கு ஏற்ப.........மாப்பிள்ளை தண்டபாணி, பெண் பாக்கியம்.......!?"

"அட எழவே என் மகனுக்குப் பொருத்தம் பார்க்கச் சொன்னால், எனக்கும் பெண்ணைப் பெத்தவளுக்கும் பார்த்து விட்டீரே"

சாஸ்திரி தன்னையறியாமல் சிரித்துவிட்டார். செட்டியார் ஆச்சரியத்துடன் அய்யரைப் பார்த்தார். அய்யர் முகத்தில் "அசடு" வழிந்தது!

பிறகு அய்யர் மழுப்ப, சாஸ்திரி ஒத்து ஊத, செட்டியார் தெளிந்தார். நாளும் பார்த்துக் கொடுத்தார்.

* * *

சோத்தூரில்:—

"மாப்பிள்ளை அலங்காரமாச்சா?"

"பெண்ணை சிங்காரியுங்கள்!"

"மேளம் முழங்கட்டும்"

இப்படி பலர் பலவிதமாக "கலியாண சந்தடி" யைக் கிளப்பிக்கொண்டிருந்தனர்.

"பெண் வரட்டும், மாப்பிள்ளையை அழைத்து வாங்கோ"—புரோகிதர் கட்டளை.

தாண்டவராயன் வந்தான் கமலக்கண்ணி வந்தாள்! எல்லோரும் பார்த்தனர்.

"நொண்டி!"—பெண் வீட்டாரின் திகைப்பு.

"பொட்டை கண்ணி"—மாப்பிள்ளை வீட்டாரின் பதட்டம்.

"இழுத்து வாங்கடா அந்த எத்தன் மகாலிங்க சாஸ்திரியை" என்று செட்டியார் மீசைத் துடிக்கக் கூவினார்.

"கடைசியில் 'பாப்பார'புத்தியை காட்டிவிட்டான் அந்தசாஸ்திரி"

கடிதம் எழுதும் தோழர்கள் கவனிக்க.

முரசொலி சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் தோழர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்;—

நிர்வாகி,
முரசொலி அலுவலகம்,
திருவாரூர்.

என்று சேலையை வரிந்து கட்டினாள் பாக்கியத்தம்மாள்.

சாஸ்திரியார்—ஸ்ரீமான் மகாலிங்க சாஸ்திரிகள்!—வந்தார். வெகு அமைதியாகச் சொன்னார்.

"நான்தான் அப்பவே சொன்னேனே"

"என்ன?"—எல்லாரும் கூவினர்.

"ஒற்றைக்காலால் உலகத்தையே ஆட்டிவைப்பான், ஒற்றைக் கண்ணால் ஊரையே சுழட்டிடுவாள் என்று"

கூட்டத்தில் அமைதி நிலவுகிறது. செட்டியாரின் முகத்தில் கோபம் மட்டும் மாறவில்லை.

பாக்கியத்தம்மாளின் பதட்டம்—துடிப்பு அடங்கவில்லை.

"பெண்ணோ குருடு, மாப்பிள்ளையோ நொண்டி ஊனத்திற்கு ஊனம், வெகு பொருத்தம்னா, நடத்துங்கள் காரியத்தை" என்றார் சாஸ்திரிகள் மிக அமைதியாக.

தாண்டவராயன் கமலக்கண்ணியின் கழுத்தில் தாலியைக் கட்டினான், ஸ்ரீமான் மகாலிங்க சாஸ்திரிகள் சிரித்தார்!

★

ஆசிரியரும் வெளியிடுபவரும்:
மு. கருணாநிதி, திருவாரூர்.
அச்சிடுபவர்: திருவை. எம். ஜமால்
கருணாநிதி (மின்னியக்க)
அச்சகம், விஜயபுரம்.